மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது சரியாகத்தான் சொன்னார். அவர் பதிலைத்தான் சொன்னார். அந்த அளவில்தான் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றபடி அதில் வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, நத்தத்தில் சுமார் 15, 20 வருடங்களாக, காவலர்களின் நீண்டநாள் கோரிக்கையான காவலர் குடியிருப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர் குடியிருப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் வருகிறது. இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாததால் இதனை அனுமதிக்கலாமா, அனுமதிக்க வேண்டாமா என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களின் முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாதது, வேண்டியதில்லை. விட்டுவிடுங்கள்.

வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

32—

தார்ச் சாலையாக மாற்றியமைத்தல்

***37611—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, புங்கார் ஊராட்சி, சுஜ்ஜில்குட்டை முதல் நீலகிரி மாவட்டம், தெங்குமரஹடா வரையுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2019 ஜூலை 4]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட சுஜ்ஜில்குட்டை முதல் தெங்குமரஹடா வரை செல்லும் சாலை 25 கி.மீ. நீளம் கொண்ட மண் சாலையாகும். சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் முதல் நிலை பகுதிக்குள், Core zone-*க்குள் வருவதால் இந்த மண் சாலையில் சிறு சிறு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல நிலையில் வனத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்ற வனத் திட்டத்துக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாரி வனச் சோதனைச் சாவடியில் திம்பம் செல்லும் சாலையில் வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணத்தை இரத்து செய்தும், இரவு நேரங்களில் இலகு ரக வாகனங்கள் செல்லவும் அனுமதி வழங்கிய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதி, புங்கார் ஊராட்சி, சுஜ்ஜில்குட்டை முதல் தெங்குமரஹடா வரை உள்ள வனச் சாலையில் 5 குக்கிராமங்கள் உள்ளன. இங்கு வாழ்ந்து வரும் பொதுமக்கள் மருத்துவ வசதி மற்றும் கல்வி மேற்படிப்புக்காக பவானிசாகருக்கு

வரவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இச்சாலையில் அரசு போக்குவரத்து வாகனங்களும், இதர வாகனங்களும் சென்று வருவதால் குண்டும் குழியுமாக, கரடுமுரடான சாலையாக உள்ளது. இச்சாலையை தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் ஒன்றியம், கெம்பநாயக்கன்பாளையம் வனச் சோதனை சாவடி முதல் கடம்பூர் வரை உள்ள குறுகலான சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதால், இச்சாலையை இருவழிச் சாலையாக விரிவுபடுத்தவும், கடம்பூர் முதல் மல்லியம்துர்க்கம் வரை உள்ள சாலையும், மாக்கம்பாளையம் செல்லும் சாலையும் மண் சாலையாக உள்ளதால் அவற்றைத் தார்ச் சாலையாக அமைத்துத் தருமாறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பாதைகள், சாலைகள் எல்லாமே சத்தியமங்கலம் வனக் கோட்டத்தில் புலிகள் காப்பக முதல் நிலைப் பகுதியில் Tiger Reserve Core Zone பகுதியில் அமைந்துள்ளன. அந்தச் சாலையின் மொத்த நீளமான 25 கி.மீ.-ல் 13 கி.மீ. நீளத்திற்கு காப்புக் காடுகள், Reserve forest-ஆக அறிவிக்கையில் வழி உரிமை right of way அனுமதிக்கப்படவில்லை. எனவே, இச்சாலையினை தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமெனில் தேசிய வன உயிரின வாரியத்தின் National Wildlife Board-ன் அனுமதி பெற்று, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் விதிமுறைக்குட்பட்டு மத்திய அரசின் முன்னனுமதி பெறப்பட வேண்டுமென்பதால், உரிய பயனீட்டாளர், User Agency, மத்திய அரசின் இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில் வனத் துறை உரிய வழியில் ஒத்துழைப்பு நல்கி சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். National Wildlife Board-ன் தலைவர் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள். அவர் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாவிட்டால், அவரால் அமைக்கப்படுகிற

அந்த குழுவினரிடம் 1980-ன் விதிமுறைக்குட்பட்டு அனுமதி கேட்கப்படுமானால், வனத் துறையின் மூலமாக அனுமதி பெறப்பட்டு நிதிநிலைமையை அனுசரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி வட்டம், காளிதிம்பம், மாவநத்தம், ராமரனை, ஆசனூர் ஊராட்சி, கெத்தேசால் ஆகிய வனச் சாலைகளில் மெட்டல் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சாலைகளை மிக விரைவிலே தார்ச் சாலையாக அமைக்க ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் குறிப்பிடுகிற அத்தனை பாதைகளும் கடுமையான புலிகள் காப்பகம் என்று சொல்கிற சத்தியமங்கலம் வனக் கோட்டத்தில் இருப்பதனால், தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டுமானால், நான் ஏற்கெனவே பதிலில் குறிப்பிட்ட National Wildlife சட்டம், 1980-ன்படி, விதிமுறைகளுக்குட்பட்டு அந்தப் பாதையை யார் போடவேண்டுமோ, அவர்கள் User Agency மூலமாக மத்திய அரசின் இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சாலைகளையெல்லாம் தார்ச் சாலைகளாக மாற்ற வனத் துறை உரிய வழியில் ஒத்துழைப்பு நல்கி, சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 ஜூலை 4

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில் உரிகம் ஊராட்சி, பிலியக்கல் என்ற மலையில் ஒரு கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்திற்குச் செல்ல வேண்டுமானால், சுமார் 3 கி.மீ. தொலைவிற்கு வனப் பகுதியிலேயே செல்ல வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதேபோல, பெட்டமுகிலாளம் ஊராட்சியில், காலிகட்டடம் என்ற கிராமத்திற்குச் செல்லும் சாலை சுமார் 3 கி.மீ. தொலைவிற்கு மண் சாலையாக இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்றித் தர வேண்டும். மாணவர்கள் அவ்வழியாக பள்ளிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால், போர்க்கால அடிப்படையில், மாணவர்களின் நலனைக் கருதி, உடனடியாக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தாவது அதைச் சீரமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பாதைகளை தார்ச் சாலைகளாக மாற்ற உரிய அனுமதி பெறுவது குறித்து ஏற்கெனவே நான் பதிலில் சொன்னபடி, அவர்கள்* User Agency *மூலமாக* online-*ல் உரிய வழிமுறைப்படி விண்ணப்பித்தால், அதற்குரிய நடவடிக்கைகளை வனத் துறை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதியில் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறுகின்றவண்ணம் பணிகளை மேற்கொள்ள வசதியாக இருக்கும். அவர்கள்* User Agency *மூலமாக விண்ணப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2019 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதிக்குட்பட்ட பச்சைமலையில் அழிவின் விளிம்பு நிலையில் பழங்குடியின மக்கள் வாழ்ந்துவருகின்றனர். துறையூர், செங்காட்டுப்பட்டி செக்போஸ்ட் முதல் மணலோடை வரை வனத் துறைக்குச் சொந்தமான தார்ச் சாலைகளும், அதேபோன்று, சோபனாபுரம் செக்போஸ்ட் முதல் டாப்செங்காட்டுப்பட்டி வரை வனத் துறைக்குச் சொந்தமான தார்ச் சாலைகளும் உள்ளன. மேற்கண்ட இடங்களில் பழங்குடியின மக்கள் வாழ்ந்துவருகின்றனர். அந்தத் தார்ச் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. நானும் பலமுறை சம்பந்தப்பட்ட பொறியாளர்களிடம் இதுகுறித்து சொல்லியும், அந்தச் சாலைகள் செப்பனிடப்படாமல் உள்ளன. தமிழகத்தில் 10 மாவட்டங்களில்தான் அழிவின் விளிம்பு நிலையில் இருக்கும் பழங்குடியின மக்கள் வாழ்ந்துவருகின்றனர். இந்த 10 மாவட்டங்களில் அழிவின் விளிம்பு நிலையில் வாழும் பழங்குடியின மக்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு நிதியை ஒதுக்க வேண்டும். வனத் துறைக்குச் சொந்தமான அனைத்துச் சாலைகளையும் உடனடியாகச் செப்பனிட வேண்டும். எப்படி நெடுஞ்சாலைத் துறை மற்றும் உள்ளாட்சித் துறைகளுக்குத் தேவையான நிதியை வழங்குகிறீர்களோ, அதேபோன்று, அழிவின் விளிம்பு நிலையில் பழங்குடியினர் வாழும் இந்த 10 மாவட்டங்களிலும் உள்ள அனைத்துச் சாலைகளுக்கும் தேவையான நிதியை ஒதுக்கி, வனத் துறைக்குச் சொந்தமான சாலைகளைச் செப்பனிட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, தமிழ்நாட்டில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் தற்போது பழங்குடியினர் மற்றும் இதர மரபு வழி வன வாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வன உரிமை அங்கீகரிப்புச் சட்டம், 2006-ன்படி, மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில்

1 ஏக்கர், 2½ ஏக்கர் பரப்பளவிற்குக்கீழ் உள்ள சாலைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு தமிழக வனத் துறையால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேலும், அவர் குறிப்பிட்ட பகுதிகள் குறித்த விவரங்களை அரசுக்குத் தெரிவித்தால், நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, வனச் சட்டங்களுக்குட்பட்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

மாவட்டக் கல்வி அலுவலகக் கட்டடம்

***48882—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கின்ற மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். அதற்கான இடத்தைத் தேர்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு துறையின் சார்பாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்